விஜயபாரதம்
மின்னனு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, வைகாசி - 29 சனி 12.06.2021 மலர் - 2, இதழ் - 67

# தி.மு.க. ஆட்சியில் கோவை புறக்கணிப்பு

கொரோனா கால நிவாரண சேவையாக கோவை பொண்ணையராஜபுரம் பகுதியில் பொதுமக்களுக்கு அரிசி உள்ளிட்ட மளிகைப் பொருட்களை தமிழக பா.ஜ.க துணைத் தலைவர் அண்ணாமலை வழங்கினார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், 'தமிழகத்தில் ஜனவரி பிப்ரவரி மாதங்களில் முழு மூச்சாக தடுப்பூசி போடப்பட்டது. கடந்த ஒன்றரை மாதமாக தத்தளித்து வரும் கோவைக்கு அரசியல் காழ்புணர்ச்சி இல்லாமல் அதிக தடுப்பூசிகளை வழங்க வேண்டும். கருணாநிதி முதல்வராக இருந்த போது மத்திய அரசு என்ற வார்த்தையை பயன்படுத்தினார். தி.மு.க அரசு புதிதாக ஒன்றிய அரசு என்ற புது வார்த்தையை ஆரம்பித்துள்ளார்கள். அப்படியெனில், கருணாநிதி மத்திய அரசு என கூறியதை தி.மு.கவினர் தவறு என்கிறார்களா? கருணாநிதிக்கு தெரியாத சட்டம், அரசியலமைப்பு முதல்வர் ஸ்டாலினுக்கு தெரிந்து விட்டதா? மக்களை திசை திருப்பவுதைதான் இதில் பார்க்கிறேன். நிதி அமைச்சர், சுகாதாரத்துறை அமைச்சர் அவரவர் துறைகளை பேசமால் வேறு துறைகளை பற்றி பேசி வருகின்றனர். மேலும், தி.மு.க கடந்த ஒரு மாதமாக கோவை புறக்கணித்துள்ளது உண்மைதான். இப்போது இந்த பிரச்சனை துவங்கியவுடன் தடுப்பூசி தருகின்றனர்' இவ்வாறு அண்ணாமலை கூறினார்.



# தடுப்பூசி போடாத சோனியா, ராகுல்



தினமும் தூங்கி எழுந்ததும் அனிச்சையாக தடுப்பூசி தடுப்பூசி என்று பேசும் காங்கிரஸ் தலைவர் சோனியாவும், ராகுலும் இதுவரை கொரோனாவால் பாதிக்கப்படாமல் இருக்க தடுப்பூசியே போட்டுக் கொள்ளவில்லை என்பதை பா.ஜ.க அம்பலப்படுத்தியுள்ளது. இது குறித்து மத்திய அமைச்சர் பிரகலாத் ஜோஷி, 'எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து கொண்டு சோனியாவும், ராகுலும் தொடர்ந்து தடுப்பூசி பற்றி கேள்விகளை எழுப்பி வருகின்றனர். மக்களின் உயிருடன் விளையாடக் கூடாது என்றும் பீதியை கிளப்புகின்றனர். இத்தனைக்கும் கடந்த ஜனவரி மாதம் தடுப்பூசி பற்றி ஏராளமான சந்தேகங்களை எழுப்பிய எதிர்க்கட்சித் தலைவர்களில் பெரும்பாலானோர் இன்று தடுப்பூசி போட்டுக் கொண்டு விட்டனர். ஆனால் எனக்கு தெரிந்தவரை, சோனியாவும், ராகுலும் இதுவரை தடுப்பூசி போட்டுக் கொள்ளவில்லை. அவர்கள் ஏன் இந்திய தடுப்பூசிகள் மீது நம்பிக்கை வைக்கவில்லை. இதுபற்றி நாட்டு மக்களுக்கு அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும்' என்று கூறியுள்ளார்.

# தடுப்பூசி குறைவாக செலுத்தும் தமிழகம்

பாரதத்தில் கொரோனா பரவல் மெல்ல கட்டுக்குள் வந்தாலும், மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், தமிழகத்தில் வைரஸ் பரவலின் தாக்கம் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டுதான் உள்ளது. இந்த நோய் தொற்றில் இருந்து மக்களை பாதுகாக்க தடுப்பூசி ஒன்றே தீர்வாக உள்ளது. இதனால், தடுப்பூசியை மக்களுக்கு செலுத்துவதில், மத்திய அரசு மிக தீவிரமாக பணியாற்றி வருகிறது. இந்நிலையில், கொரோனா தடுப்பூசி மிகக் குறைவாக செலுத்திய மாநிலங்களின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. அதில், தமிழகம் இடம்பிடித்துள்ளது. தமிழகத்தில் இதுவரை, 9 வதவீதம் பேருக்கே முதல் தவணை கொரோனா தடுப்பூசி போடப்பட்டுள்ளது. ஆனால், கேரளாவில் 22.5 சதவீதம் பேரும், குஜராத்தில் 20.5 சதவீதம் பேரும் முதல் தவணை தடுப்பூசி போட்டுள்ளனர். அனைத்து மாநிலங்களைக் காட்டிலும் மிக சிறந்த மருத்துவ கட்டமைப்பைக் கொண்ட தமிழகத்தில், முதல் தவணை கொரோனா தடுப்பூசி குறைந்த அளவிலான மக்களுக்கு செலுத்தப்பட்டிருப்பதற்கு, தமிழக அரசு மக்களுக்கு இது குறித்த போதிய விழிப்புணர்வை ஏற்படுத்தவில்லை, கோவை உள்ளிட்ட தென் மாவட்டங்களில்



கவனக்குறைவு, முறையான தடுப்பூசி நிர்வகிப்பு இல்லை, அலட்சியம் போன்ற நிர்வாகக் குளறுபடிகளே காரணமாக இருக்கும். தமிழக அரசு இது குறித்து ஆராய்ந்து உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கருதுகின்றனர்.

---

# நாட்டை விட்டு வெளியேறத் தயார்




ஈஷா யோக மையம் அமைப்பின் நிறுவனர் ஜக்கி வாசுதேவ், கோயில்களை அரசுப் பிடியில் இருந்து மீட்க 'கோவில் அடிமை நிறுத்து' என்ற ஒரு இயக்கத்தை சமீபத்தில் துவங்கினார். அதற்கு பொதுமக்கள் மத்தியில் ஏகோபித்த வரவேற்பு இருந்தது. வழக்கம்போல, திராவிட கட்சிகளைச் சேர்ந்தோர் கடும் எதிர்ப்புகளைத் தெரிவித்தனர். தி.மு.க அமைச்சர் அப்படிச் செயல்படுத்த முடியாது எனக் கூறினார். இந்நிலையில் தற்போது அவர்கள், ஜக்கி வாசுதேவுக்கு எதிரான டுவிட்டர் உள்ளிட்ட சமூக வலைதளங்களில், காட்டை ஆக்கிரமித்து கோவையில் உள்ள ஈஷா யோக மையத்தைக் கட்டியுள்ளதாக கூறி ஹேஸ்டேக் பதிவிட்டனர். இது குறித்து ஜக்கி வாசுதேவ் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார். 'அதில், வனத்துறைக்குச் சொந்தமான ஒரு இன்ஞ் நிலத்தை நான் ஆக்கிரமித்துள்ளதாக நிரூபித்தால் நாட்டை விட்டு வெளியேறத் தயார்' எனக் கூறியுள்ளார்.

# கொரோனா பெயரில் கடவுள் அவமதிப்பு

ராமநாதபுரம் மாவட்ட காவலர்கள் மற்றும் ஊராட்சி தலைவர்கள் கூட்டமைப்பு சார்பில், கொரோனா விழிப்புணர்விற்காக, 'கொரோனாவை விரட்ட குறி சொல்லும் நவீன கருப்பசாமி' என்ற கலை நிகழ்ச்சி நடந்தது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், காவல் ஆணையர் கார்த்திக், கூடுதல் மாவட்ட ஆட்சியர் பிரதீப்குமார் உள்ளிட்ட அதிகாரிகளும், பொதுமக்கள் 200க்கும் அதிகமானோரும் பங்கேற்றனர். இதில், கருப்பசாமி வேடமிட்டு சாமி ஆடியவர், மருத்துவர், காவல் அதிகாரிகள் போல வேடமிட்டவர்கள் கால்களில் விழுந்து வணங்கினார். அவர்களிடம், 'கொரோனாவை விரட்ட என்னால் முடியாது. நீங்கள்தான் என்னைவிட பெரியவர்கள். வாழும் கடவுள்' என்றார். மேலும், பொதுமக்களை பார்த்து, 'கோயிலுக்கு போகும் முட்டாள்களே... கொரோனாவை கட்டுப்படுத்த முகக்கவசம் அணியுங்கள்,' எனக் கூறி, முக கவசம் அணிந்தார். ஹிந்து கடவுளான கருப்பசாமி வேடமணிந்து சாமி ஆடியவரின் இந்த செயல், கடவுள்களை இழிவுபடுத்துவது போல் அமைந்தது. மேலும், கொரோனா பொதுமுடக்கக் காலத்தில் அங்கு மக்கள் சமூக இடைவெளியின்றி குவிந்தனர். கொரோனா விழிப்புணர்வு என்ற பெயரில், ஹிந்துக்களின் கடவுள்களையும் ஹிந்துக்களையும் அவமதிக்கும் இது போன்ற செயல்கள் கண்டிக்கத்தக்கது. இதனை கண்டிக்காமல் வேடிக்கை பார்த்த ஆட்சியர், காவல் அதிகாரிகள் மீதும் அதில் நடித்தவர், அவரை நடிக்க பின்புலமாக செயல்பட்டவர்கள் மீதும் சட்டப்படி வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு.



# மலிவு விலை முகக்கவசம்

கொரோனா பெருந் தொற்றிலிருந்து மனிதர்களைப் பாதுகாப்பதில் முகக்கவசங்களின் பங்கு மிக முக்கியமானது. மத்திய தொழில்நுட்பத் துறை புதியதாக 'எஸ்.எச்.ஜி 95' முகக்கவசத்தை அறிமுகம் செய்துள்ளது. மத்திய அரசின் உயிரி தொழில்நுட்பத் தொழில் ஆராய்ச்சி உதவிக் கவுன்சில் (பி.ஐ.ஆர்.ஏ.சி), ஐ.கே.பி நாலேட்ஜ் பார்க் உள்ளிட்ட அமைப்புகள் இணைந்து உருவாக்கிய 'எஸ்.எச்.ஜி 95' என்கிற வீரியம் மிக்க பல அடுக்கு முகக் கவசத்தை ஐதராபாத்தில் உள்ள பரிசோதா டெக்னாலஜிஸ் என்கிற தனியார் மருத்துவ நிறுவனத்துடன் இணைந்து தயாரித்துள்ளன. இவை மறு உபயோகத்துக்குப் பயன்படாத 'என்95' முகக்கவசங்களுக்கு மாற்றாக அமையும். விலையும் மலிவு. பருத்தித் துணியால் தயாரிக்கப்படும் இந்த முகக் கவசங்கள் பல அடுக்கு கூடுதல் பாதுகாப்பை அளிக்கும். மீண்டும் பயன்படுத்தவும் முடியும். இந்த முகக்கவசங்களுக்கு ரூ.50 முதல் 75 ரூபாயாக விலை நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. 'மேக் இன் இந்தியா' திட்டத்தின் கீழ் தயாரிக்கப்படும் இந்த வகை முகக்கவசங்கள் 90 சதவீதம் மாசு துகள்களிலிருந்தும், 99 சதவீத வைரஸ் கிருமிகளிடம் இருந்தும் பாதுகாக்கும். அதேசமயம், எளிதாக காற்றை சுவாசிக்கும் வகையிலும் இந்த முகக்கவசம் தயாரிக்கப்பட்டு உள்ளது.

# தடுப்பூசிகளை தனியாருக்கு விற்றதா மாநகராட்சி?


தமிழகத்தில் கொரோனா தடுப்பூசிக்கு கடும் தட்டுப்பாடு நிலவி வருகிறது. இந்நிலையில், கடந்த 5ம் தேதி திருப்பூர் மாவட்ட சுகாதாரத்துறை அலுவலகத்துக்கு 2,000 கோவாக்சின் தடுப்பூசிகள் வந்துள்ளன. 5 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சென்றடைய வேண்டிய, 800க்கும் மேற்பட்ட தடுப்பூசிகளை சம்பந்தப்பட்ட அரசு மருத்துவர்களுக்கே தெரியாமல் தனியார் பின்னலாடை நிறுவனங்களுக்கு மாநகராட்சி வழங்கி உள்ளது. இது தொடர்பாக, திருப்பூர் மாநகராட்சி மீது மாவட்ட சுகாதாரத்துறை குற்றம் சாட்டியுள்ளது. 18 வயதுக்கும் மேற்பட்ட மற்றும் 45 வயதுக்கும் மேற்பட்டவர்களுக்கு செலுத்த வேண்டிய தடுப்பூசிகள் இவை.

இது குறித்து, திருப்பூர் மாவட்ட சுகாதாரத்துறை துணை இயக்குநர் மருத்துவர் ஜெகதீஷ்குமார், 'நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்களுக்கு தெரியாமல், தனியார் பின்னலாடை நிறுவனத்தில் தடுப்பூசி போட்டுள்ளனர். தனியார் மருத்துவமனை மருத்துவர்களை வைத்து தடுப்பூசி போடக்கூடாது. அரசு மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களை கொண்டே தடுப்பூசி போட சொல்லித்தான் அரசு வழிகாட்டும் நெறிமுறையில் உள்ளது' என்றார்.

ஆனால், 'அரசு விதியின்படி, புலம்பெயர் பின்னலாடை நிறுவனத் தொழிலாளர்களுக்கு முன்உரிமை அடிப்படையில் தடுப்பூசிகள் செலுத்த உத்தரவு உள்ளது. அதன்படி, பனியன் நிறுவனங்களில் பணி புரியும் தொழிலாளர்களுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. போதிய அரசு மருத்துவர்கள் இல்லாத காரணத்தால் தனியார் மருத்துவமனை மருத்துவர்கள் கொண்டு தொழிலாளர்களுக்கு தடுப்பூசி போடப்பட்டது. எதையும் மறைத்து செய்யவில்லை' என்று கூறியுள்ளார் திருப்பூர் மாநகர் நல அலுவலர் பிரதீப் வாசுதேவ கிருஷ்ணகுமார். இதில், முறைகேடுகள் எதுவும் நடந்துள்ளதா என விசாரணை நடத்த வேண்டும். அதே சமயம், தடுப்பூசியை கையாள்வதில் சுகாதாரத்துறையினரும் கவனமாக இருக்க வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு.



# தொடரும் மேற்கு வங்க வன்முறை



மேற்கு வங்கத்தில் கொல்கத்தாவின் சந்தனநகர் மற்றும் பாலிகுங்கே தில்ஜாலா பகுதிகளில் கடந்த வியாழக்கிழமை அன்று, இரு சமூகங்களுக்கு இடையே மோதல் ஏற்பட்டது. இதில், காளிக் கோயில் ஒன்று அடித்து நொறுக்கப்பட்டது. காவல்துறை வாகனம் சூறையாடப்பட்டது. நாட்டு வெடிகுண்டுகள் வீசப்பட்டன. சஞ்சீப் பாசு என்ற பத்திரிகையாளர் தாக்கப்பட்டார். அந்தப் பகுதிகளில் அமைதியை நிலைநாட்ட மம்தா பானர்ஜியின் நிர்வாகம் அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்' என ஆளுநர் ஜகதீப் தங்கர் கூறியுள்ளார். 'திருணாமுல் கட்சி குண்டர்கள் நாட்டில் ஜனநாயகத்தை படுகொலை செய்து வருகின்றனர்' என இந்த சம்பவத்தைக் கண்டித்துள்ளார் பாஜக எம்.எல்.ஏவும், மேற்கு வங்காள சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவருமான சுவேந்து ஆதிகாரி.

# உணவு பாதுகாப்பு ஆணையம் அறிவிப்பு

உணவு வணிக நிறுவனங்கள், வரும் அக்டோபர் 1ம் தேதி முதல், தங்கள் பில்களில், இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர ஆணையமான எப்.எஸ்.எஸ்.ஏ.ஐ அமைப்பில் அவர்கள் பதிவு செய்துள்ள பதிவு எண்ணை அல்லது உரிம எண்ணை கட்டாயமாக குறிப்பிடப்பட வேண்டும். உணவு பொருட்கள் குறித்த புகார்களை நுகர்வோர் தெரிவிக்கும்போது தேவையான தகவல்களை அவர்களால் தரமுடிவதில்லை. அந்த குறை இதனால் தீரும். இனி அவர்கள் குறிப்பிட்ட உணவு வணிகம் குறித்து புகார் வழங்கும்போது, இந்த எண்ணை குறிப்பிட்டு புகார் வழங்க முடியும். இதனால் நுகர்வோருக்கு விழிப்புணர்வு அதிகரிக்கும். அவ்வாறு குறிப்பிடாதவை பாதுகாப்பு தரம் அற்றவை என்பதை அவர்கள் அறிந்து கொள்ளவும் முடியும் உரிமம் மற்றும் பதிவுத் துறையினர், உணவு வணிக நிறுவனங்கள் இந்த புதிய ஆணையை செயல்படுத்துவது குறித்து அனைவருக்கும் முறையாக தெரியப்படுத்த வேண்டும் என்றும் ஆணையம் தெரிவித்துள்ளது.

# நடிகை மீது தேசத் துரோக வழக்கு



'லட்சத்தீவில் வசிக்கும் மக்களுக்கு எதிராக மத்திய அரசு உயிரியல் ஆயுதத்தைப் பயன்படுத்துகிறது' என நடிகை ஆயிஷா சுல்தானா மீடியா ஒன் என்ற மலையாள செய்தி சேனலில் தேச விரோத கருத்துக்களை தெரிவித்தார். அந்தகலந்துரையாடலில் கலந்துகொண்ட பா.ஜ.க பிரதிநிதி, ஆயிஷா தனது கருத்தை வாபஸ் பெறுமாறு வலியுறுத்தினார். ஆனால் நடிகை மறுத்துவிட்டார். இதனால், அவரது சர்ச்சைக்குரிய கருத்து குறித்து பா.ஜ.க பாலக்காடு, பதனம்திட்டா மற்றும் திருவனந்தபுரம் காவல் நிலையங்களில் புகார்களை அளித்தது. இதனையடுத்து, அவர் மீது, பிரிவு 124 ஏ, 153 பி இன் கீழ் தேசத்துரோக குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட மத்திய அரசு துறைகளும் அவரது பேச்சு குறித்து ஆராய்ந்து வருகின்றன. ஆயிஷா விரைவில் கைது செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஆந்திர அரசின் சிறுபான்மை கரிசனம்



ஆந்திர அரசு சமீபத்தில் வெளியிட்ட அரசாணை G.O.MS.No. 52ன்படி கிறிஸ்தவ பாதிரிகளுக்கு அம்மாநில அரசு வழங்கும் உதவித்தொகை போலவே, ஹிந்து கோயில் அர்ச்சகர்களுக்கும் மசூதிகளில் பணி புரியும் இமாம்களுக்கும் உதவித்தொகை வழங்கப்படும் என தெரிவித்துள்ளது.

பார்க்க இது நல்ல திட்டமாகத் தெரிந்தாலும், ஜகன் மோகன் ரெட்டியின் தலைமையிலான அரசு, சீக்கியர்கள், சமணர்கள், பௌத்தர்களை இப்பட்டியலில் இருந்து நீக்கிவிட்டது. கோயில்களின் வருமானத்தை பொருத்தே அர்ச்சகர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படும். ஆனால், இமாம்களுக்கும் பாதிரிகளுக்கும் அப்படிப்பட்டத் தடைகள் ஏதுமில்லை.

அர்ச்சகர்களுக்கு கோயிலின் நிதியில் இருந்துதான் பணம் வழங்கப்படும். ஆனால், இமாம்களுக்கும் பாதிரிகளுக்கும் அரசுக்கு மக்கள் கட்டும் வரியில் இருந்து பணம் வழங்கப்படும். வஃப் வாரியத்தை பலப்படுத்த தேவையான நடவடிக்கைகளை மாநில அரசு எடுக்கும். ஆனால், கோயில்கள் விஷயத்தில் அப்படி எந்த நடவடிக்கையும் இல்லை. மேலும், அரசு கோயிலின் அனைத்து விஷயங்களிலும் தலையிடும் என்பது போன்ற ஹிந்து விரோத அம்சங்கள் இதில் மறைக்கப்பட்டுள்ளன.

மேலும், ஒரு குறிப்பிட்ட மதத்தைச் சேர்ந்த ஒரு சில நபர்களின் நலனுக்காக அரசு அதன் பணத்தையும் செலவிடகூடாது என உச்ச நீதிமன்றம் ஏற்கனவே தெளிவுபடுத்தியுள்ளது. 2012ல் மேற்கு வங்கத்தில் இதே போன்றதொரு வழக்கில் கல்கத்தா உயர்நீதிமன்றம் அரசின் முடிவை ரத்து செய்தது. ஒரு சில நாட்களுக்கு முன், கேரள நீதிமன்றமும், மதரசா பள்ளி ஆசிரியர்கள் வழக்கில் இதனை வலியுறுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

---

# மாத்ருபூமி செய்தி ஆசிரியர் ராஜினாமா




மாத்ருபூமி நியூஸ் சேனல் ஆளும் சி.பி.எம்மின் ஆதரவாளரான லோக்தாந்த்ரிக் ஜனதா தளத் தலைவர் எம்.வி. ஸ்ரேயம்ஸ்குமார் என்பவருக்கு சொந்தமானது. அந்த சேனல் நிர்வாகம் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஆதரவாக செயல்படுமாறு மாத்ரூபூமியின் செய்தி ஆசிரியர் உன்னி பாலகிருஷ்ணனுக்கு அழுத்தம் கொடுத்தது. இதனால் அவர் தனது பதவியில் இருந்து விலகியுள்ளார். முன்னதாக, சேனல்கள் மதிப்பீடு பட்டியலில், மாத்ரூபூமி நியூஸ் முதல் மூன்று இடங்களில் இருந்தது, ஆனால் ஜனம் டிவி மற்றும் பிற புதிய செய்தி சேனல்களின் துவக்கம் மாத்ருபூமியை பின்னடைய செய்துள்ளது. ஆனாலும், அம்மாநிலத்தை ஆளும் சி.பி.எம் கட்சிக்கு ஆதரவாக இருப்பது தங்களுக்கு உதவும் என்ற நிலைப்பாடில் உள்ளது மாத்ருபூமி. கேரள செய்தி சேனல்கள் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஆதரவாக நடந்துகொள்வதை அம்பலப்படுத்தும் நிகழ்வாக இந்த சம்பவம் திகழ்கிறது.

# கைதான விவசாய போராளிகள்

திக்ரி எல்லையில் நடைபெறும் புதிய வேளாண் சட்டங்கள் எதிர்ப்பு போராட்டத்தில் பங்கேற்க, மேற்கு வங்கத்திலிருந்து வந்த 25 வயது பெண்ணை, பாலியல் பலாத்காரம் செய்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட மூன்று பேரையும் ஜஜ்ஜார் காவல்துறையினர் கடந்த புதன்கிழமை அன்று கைது செய்தனர். கைது செய்யப்பட்ட முக்கிய குற்றவாளி அனில் மாலிக் தனது கூட்டாளியான அனுப் சீனாட் உடன் இணைந்து அந்த பெண்ணை ரயிலிலும், விவசாயிகள் போராட்ட களத்திலும் பாலியல் பலாத்காரம் செய்ததாகவும் அதனை வீடியோ பதிவு செய்ததாகவும் ஒப்புக்கொண்டார். அந்த வீடியோ காவல்துறையால் கைப்பற்றப்பட்டது. பாலியல் வன்கொடுமைக்கு ஆளான அந்த பெண் கடந்த. ஏப்ரல் 30ல் கொரோனாவால் பாதிக்கப்பட்டு பகதர்கரில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் பலியானார் என்பதும். இது குறித்து விவியசாய போராட்டத் தலைவர்களான ராகேஷ் திகாயத், யோகேந்திர யாதவ் உள்ளிட்டோர் இன்றுவரை வாய் திறக்காமல் மௌனமாக உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# எல்லையில் பிடிபட்ட நபர் உளவாளியா?



வங்கதேசத்திலிருந்து மேற்கு வங்கத்தின் மால்டா பகுதிக்குள் சீனாவைச் சேர்ந்த நபர் ஊடுருவ முயன்றுள்ளார். அவரை தடுத்து நிறுத்திய இந்திய எல்லை பாதுகாப்புப் படையினர் அவரிடம் விசாரணை நடத்தினர். அப்போது அவர் அளித்த பதில்கள் திருப்தியளிக்கவில்லை. இதனைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட பாதுகாப்பு அமைப்புகளுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் பிடிபட்ட நபரிடம் விசாரணை நடத்தினர். 35 வயதான அந்த நபர், தனது பெயர் ஹான் ஜுன்வே எனவும், சீனாவின் ஹூபேயில் வசிப்பதாகவும் தெரிவித்துள்ளார். அவரிடம் இருந்த பாஸ்போர்ட்டில் அவர் ஜூன் 2ஆம் தேதி வங்கதேசத்திற்கு வந்ததும் 10ஆம் தேதி பாரத எல்லைக்குள் ஊடுருவ முயன்றதும் தெரியவந்தது. அவர் இதற்கு முன்பாக 2010ல் ஹைதராபாத் ஒருமுறை, 2019க்குப் பிறகு மூன்றுமுறை குருகிராம், டெல்லி என மொத்தம் நான்குமுறை பாரதம் வந்துள்ளார். அவரது தொழில் கூட்டாளி, லக்னோவின் பயங்கரவாத தடுப்புப் பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் மீது ஏற்கனவே பாரதத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதனால் அவருக்கு விசா கிடைக்கவில்லை. எனவே, அவர் வங்கதேசம் வழியாக பாரதத்திற்குள் ஊடுருவ முயன்றுள்ளார் என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது. மேலும், அவரிடம் இருந்த மின்னணு கருவி பறிமுதல் செய்யப்பட்டது. அவர் சீன உளவாளியாக இருக்கலாம் எனவும் சந்தேகிப்பதால் அவரிடம் விசாரணை தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

# ஐ.நா. பொதுச்சபை செயலாளராக இந்தியர்



ஐ.நா., பொதுச் சபை தலைவர் பதவிக்கு சமீபத்தில் நடந்த தேர்தலில் பாரதத்தின் துணையால் மாலத்தீவு வெளியுறவு துறை அமைச்சர் அப்துல்லா ஷாஹித் வெற்றி பெற்றார். அவருக்கு 143 ஓட்டுகளும், எதிர்த்து போட்டியிட்ட ஆப்கன் வெளியுறவு துறை அமைச்சர் சல்மாய் ரசூலுக்கு 48 ஓட்டுகளும் கிடைத்தன. அப்துல்லா ஷாஹித் தன் சிறப்பு துாதராக ஐ.நா.,வுக்கான மாலத்தீவு துாதர் தில்மீசா உசேநையும் முதன்மை செயலராக பாரதத் துணை துாதர் கே.நாகராஜ் நாயுடு குமாரையும் நியமித்துள்ளார். இது குறித்து நாகராஜ் நாயுடு குமார் கூறுகையில், 'ஐ.நாவின் பிரதிநிதியாக, முக்கிய கொள்கைகளை உருவாக்கும் அமைப்பாக ஐ.நா., பொதுச் சபை திகழ்கிறது. 193 உறுப்பு நாடுகள் அடங்கிய ஐ.நா பொதுச் சபை, சர்வதேச அமைதி, பாதுகாப்பு உள்ளிட்ட முக்கிய பிரச்னைகளை விவாதிக்கும் தளமாக திகழ்கிரது. அதில், அப்துல்லா ஷாஹித் தலைமையில் பணியாற்ற கிடைத்த வாய்ப்பை பெருமையாக கருதுகிறேன்' என தெரிவித்துள்ளார்.

# கூ - செயலியை பயன்படுத்தும் நைஜீரியா




நைஜீரிய அதிபர் முகமது புஹாரி, அந்த நாட்டில் உள்ள பிரிவினைவாத அமைப்புகளுக்கு எதிராக டுவிட்டரில் கருத்து பதிவிட்டார். அதனை, டுவிட்டர் நிறுவனம் நீக்கியது. இதையடுத்து டுவிட்டருக்கு, நைஜீரிய அரசு காலவரம்பற்றத் தடை விதித்துள்ளது. இதனை அமெரிக்க முன்னாள் அதிபர் டிரம்ப் உட்பட பலர் வரவேர்ரனர். இந்நிலையில், பாரதத்தில் மேக் இன் இந்தியா திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட பெங்களூரை தலைமையிடமாக வைத்து செயல்படும், 'கூ' செயலியில் நைஜீரிய அரசின் அதிகாரப்பூர்வ கணக்கு துவக்கப்பட்டுள்ளது. இது குறித்து கருத்து தெரிவித்த 'கூ' நிறுவன தலைமை செயல் அதிகாரி அப்ரமேயா ராதாகிருஷ்ணா, 'நைஜீரியாவின் உள்நாட்டு மொழியிலும், இந்த செயலியை பயன்படுத்தும் வாய்ப்பை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, பாரதத்தைத் தொடர்ந்து 'கூ' மற்ற நாடுகளிலும் தன் சிறகை விரித்துள்ளது. பாரத அரசின், தகவல் தொழில்நுட்ப சட்டத் திருத்தத்தில் கூறியுள்ள அனைத்து நிபந்தனைகளையும் நிறைவேற்றியுள்ளோம். பல மொழிகளிலும் எங்கள் செயலியை பயன்படுத்த முடியும். மேற்கொண்டு அதிக வசதிகளை ஏற்படுத்தவும் தயாராக உள்ளோம்' என அவர் கூறியுள்ளார்.

# துணை நெப்டியூன்

பூமியில் இருந்து 90 ஒளியாண்டுகள் தொலைவில் அமைந்துள்ள TOI1231 b என்ற புதிய கோளை நாசா விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். 'டிரான்சிட்டிங் எக்ஸோபிளானட் சர்வே சேட்டிலைட்' வழியாக இக்கோள் அடையாளம் காணப்பட்டுள்ளது. 'இந்த புதிய கோள் பார்ப்பதற்கு அச்சு அசல் நெப்டியூனை போல உள்ளது. பூமியை விட மூன்றரை மடங்கு பெரியது. இது ஒவ்வொரு 24.3 நாட்களுக்கு ஒரு முறை அதன் நட்சத்திரத்தை சுற்றி வருகிறது. இந்த கோளில் நீர் இருக்க வாய்ப்புள்ளது. பூமியைவிட அதிக குளர்ச்சியான தன்மை கொண்டதாக இருக்கலாம். பூமியில் நிலவும் சீதோஷண நிலை இந்த கோளில் நிலவ வாய்ப்புள்ளதையும் மறுப்பதற்கில்லை. கணிசமான வளிமண்டலத்தால் சூழப்பட்டிருக்கலாம். வரும் காலங்களில் இந்தக் கொள் தொடர்பாக பல்வேறு ஆய்வுகளை மேற்கொள்ளப்படும்' என நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.






# தடுப்பூசி சான்றிதழ் பிழையா

கொரோனா தடுப்பூசி சான்றிதழ்கள் வெளிநாடு பயணங்கள், வேலை வாய்ப்பு போன்ற காரணங்களுக்கு உதவும் ஒரு முக்கிய ஆவணமாகக் கருதப்படுகிறது. இந்த கோவின் தடுப்பூசி சான்றிதழ்களில், பெயர், பிறந்த ஆண்டு மற்றும் பாலினம் ஆகியவற்றில் பிழைகள் வந்தால், கோவின் வலைத்தளத்தில் சென்று திருத்தங்களைச் செய்யலாம் என்று ஆரோக்கிய சேது ஆப் வெளியிட்ட டுவீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக, தடுப்பூசி போடப்பட்ட நபர்கள் சுய மதிப்பீட்டு செயல்முறை மூலம் ஆரோக்யா சேது பயன்பாட்டில் தங்கள் நிலையை தானாக முன்வந்து புதுப்பிக்க அரசாங்கம் அனுமதித்திருந்தது. முதல் டோஸ் தடுப்பூசி செலுத்திக்கொண்டவர்களுக்கு அவர்களின் ஆரோக்கிய சேது ஆப்'பின் முகப்பு பக்கத்தில் காண்பிக்கப்படும் தடுப்பூசி நிலை அல்லது ஸ்டேட்டஸில் நீல நிற கோடுடன் ஆரோக்யா சேது லோகோவுடன் ஒற்றை டிக் கிடைக்கும். இரண்டாவது டோஸ் செலுத்திய 14 நாட்களுக்குப் பிறகு, முழுமையாக தடுப்பூசி போடப்பட்டவர்களுக்கு இரட்டை டிக் கொண்ட 'ப்ளூ ஷீல்ட்' ஆப்பில் தோன்றும்.

பிழைகளை சரி செய்யும் வழிமுறைகள்: http://cowin.gov.in தளத்துக்குச் சென்று, பதிவு / உள்நுழை (Register/Sign In) என்பதை க்ளிக் செய்ய வேண்டும். பின்னர் அலைபேசி எண்ணை பதிவிட்டு அந்த எண்ணிற்கு வரும் ஓ.டி.பி.யை கொடுக்க வேண்டும். பின்னர், தனிநபர் தகவல் பகுதிக்கு சென்று, Raise an Issue என்பதை தேர்வு செய்ய வேண்டும். அதில், 'சான்றிதழில் திருத்தம்' (Correction in Certificate)என்பதை தேர்வு செய்து தேவைப்படும் திருத்தங்களை செய்துகொள்ளலாம்.

## பரதன் பதில்

*காங்கிரஸ் கட்சி பெட்ரோல் டீசல் விலை உயர்வை எதிர்த்து போராட்டம் செய்துள்ளதே?*

**- எஸ். கௌசல்யா, சத்தியமங்கலம்**

பெட்ரோல் டீசல் விலையை ஜி.எஸ்.டிக்குள் கொண்டுவரக்கூடாது என சொல்வதில் முதல் ஆளாக நிற்பவர்கள் காங்கிரஸ்காரர்கள்தான். பெட்ரோல் விலையில் பெரும்பங்கு வரி மா நில அரசுகளுக்குத்தான் செல்கிறது. முதலில் அவர்கள் ஆளும் மாநிலங்கள், கூட்டணி கட்சிகள் ஆட்சி செய்யும் மாநிலங்களில் அந்த வரியை குறைக்க சொல்லலாமே.


விஜயபாரதம் தேசிய வார இதழ்

சந்தா செலுத்த / புதுப்பிக்க
www.vijayabharatham.org
என்ற இணையதளம் அல்லது
044 - 26420870 என்ற தொலைபேசி
எண்ணில் தொடர்பு கொள்ளவும் .

93613 99006

# நீ எப்படியோ மற்றவர்களும் அப்படித்தான்



தன் முன் கவலையுடன் நின்ற இளைஞனைப் பார்த்த குரு. என்ன பிரச்னை? என கேட்டார். “எனக்கு வியாபாரம் சரியாக நடக்கவில்லை, எல்லோரும் என்னை எதிரியாகவே பார்க்கிறார்கள். என்ன செய்வது என்றே தெரியவில்லை.” அவன் சொன்னதிலிருந்தே இளைஞனுடைய பிரச்சனை குருவுக்குத் புரிந்தது. அவனுக்கு ஒரு கதையை சொன்னார்.

ஒரு ஊருக்கு வெளியே மரத்தடில பெரியவங்கலாம் உட்கார்ந்து பேசிக்கிட்டு இருந்தாங்க. அப்போ அங்க புதுசா ஒருத்தன் வந்தான். “நான் பக்கத்து ஊரிலிருந்து வர்றேன். இந்த ஊர்ல வியாபாரம் செய்யலாம்னு இருக்கேன். இந்த ஊர்ல ஜனங்கலாம் எப்படி?” என்று கேட்டான்.

அதற்கு ஒரு பெரியவர், “உன் ஊர்ல ஜனங்கலாம் எப்படி?" என்று எதிர் கேள்வி கேட்டார்.

“ஐயோ, அத ஏன் கேக்குறீங்க. ஒருத்தன்கூட சரியில்ல, எல்லாம் பொறாமை பிடிச்சவங்க” என்றான் அவன்.

“அப்படியா? இந்த ஊர் ஜனங்களும் அப்படித்தான். பெரிய வித்தியாசமில்லை” என்று பதிலளித்தார் பெரியவர். வந்தவன் வேறு வழியாக போய்விட்டான்.

சிறிது நேரத்தில் இன்னொருவன் வந்தான். அவனும் அந்த ஊரைப் பற்றி விசாரித்தான். இவனிடமும் பழைய ஊரைப் பற்றி விசாரித்தார் பெரியவர்.

“அது ரொம்ப நல்ல ஊர், ஜனங்க ரொம்ப நல்லவங்க, இனிமையா பழகுவாங்க. அந்த ஊர்ல வியாபாரம் செஞ்ச மாதிரி இங்கேயும் வியாபாரம் செய்யலாம்னு நினைக்கிறேன்” என்று சொன்னான் வந்தவன்.

உடனே பெரியவர், “இந்த ஊரும் அப்படித்தான். ஜனங்க நல்லவங்க. உனக்கேத்த ஊரு” என்று சொல்லி ஊருக்குள் அனுப்பி வைத்தார்.

அப்போது அருகிலிருந்த ஒருவர், “என்ன அவனுக்கு அப்படிச் சொன்ன, இவனுக்குச் இப்படிச் சொல்ற?” என்று கேட்டார்.

“ரெண்டு பேர் கிட்டேயும் ஊரைப் பத்தி கேட்டேன். முதல்ல வந்தவன் எல்லாத்தையும் எதிர்மறையா பாக்கிறவன். அவனால எந்த ஊர்லயும் குப்பை கொட்ட முடியாது. இரண்டாவது வந்தவன் எல்லாத்தையும் நல்லவிதமாக பாக்கிறவன். அவனால எங்கேயும் சாதிக்க முடியும்” என்றார் பெரியவர்.

அந்த இளைஞனுக்கு தன்னுடைய குறை புரிந்தது.